## மக்களின் மகிழ்ச்சிக்கு திராவிட மாடல் ஆட்சியே சாட்சி!

# கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பண்டிகைக்கு பேருதவியாக இருக்கிறது!

## இல்லத்தரசிகள் பெருமிதத்துடன் புகழாரம்!

**மக்களின் மகிழ்ச்சிக்கு திராவிட மாடல் ஆட்சியே சாட்சி என்றும், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கிய கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பண்டிகைக்கு பேருதவியாக இருக்கிறது என்று இல்லத்தரசிகள் பெருமிதத்துடன், மட்டற்ற மகிழ்ச்சியுடனும் திராவிட மாடல் ஆட்சிக்கு புகழாரம் சூட்டியுள்ளனர்.**

கடந்த 2021 ஆம் ஆண்டு தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்த அ.தி.மு.க. அடிமை ஆட்சியை தமிழக மக்கள் அகற்றி விட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் தமிழகத்தை ஆளும் பொறுப்பை வழங்கினர். தமிழ்நாடு முதலமைச்சராக கழகத்தின் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு மகளிர் இலவசமாக பேருந்தில் பயணம் செய்யக்கூடிய வகையில் மகளிர் விடியல் பயணம், பெண் அரசு அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கான பேறு கால விடுப்பு திட்டம், பெண் குழந்தைகள் கல்வி பயில்வதை ஊக்கப்படுத்தும் வகையில் மாதந்தோறும் 1,000 ரூபாய் வழங்கக் கூடிய புதுமைப்பெண் திட்டம், மகளிர் சுய உதவிக்குழு கடன் உதவித்திட்டம், குடும்பத் தலைவிகளின் பெயரில் அரசு வீடு வழங்கும் திட்டம், அரசு மகளிர் விடுதி திட்டம் என மக்களுக்கான பல திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக மகளிருக்கு பல்வேறு சிறப்பான திட்டங்களை அறிவித்தது செயல்படுத்தி வருகிறது.

முதல்வரின் மூன்றாண்டு கால ஆட்சியில் முத்தான மூன்று திட்டங்களில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் ஒன்று. இத்திட்டத்தை கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தொடக்கி வைத்தார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைக்கப்பட்ட கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத் தின் மூலம் முதற்கட்டம் மற்றும் விடுபட்டவர்களுக்கான இரண்டாம் கட்டம் என தமிழகம் முழுவதும் 1 கோடியே 15 லட்சத்திற்கும் அதிகமான மகளிர் மாதம் தோறும் 1,000 ரூபாய் பெற்று வருகின்றனர். திருப்பூர் மாவட்டத்திலும் நடைபாதையில் வணிகம் செய்திடும் மகளிர், கட்டுமான தொழிலில் பணிபுரியும் மகளிர், சிறிய கடைகள், சிறுதொழில் மற்றும் பனியன் நிறுவனங்களில் குறைவான ஊதியத்தில் பணி செய்யும் மகளிர் என தகுதியுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இத்திட்டத்தின் கீழ் பல லட்சம் மகளிர் மாதம் தோறும் 1,000 ரூ பாய்மகளிர் உரிமைத்தொகை பெற்று வருகின்றனர். அவர்களுக்கு வழங்கப்படும் உரிமைத்தொகை மனதளவில் அவர்களிடத்தில் தன்னம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து வரும் ஒவ்வொரு மகளிருக்கும் 1,000 ரூபாய் ஏதோ ஒரு வகையில் பயன்பட்டு வருகிறது. வீட்டில் உள்ள மகளிர் தங்கள் வீட்டு தேவைகளை பூர்த்தி செய்கின்றனர். சாலையோர கடை அமைத்துள்ள மகளிர் தங்கள் தொழிலுக்கான முதலீடு செலுத்துகின்றனர். சிலர் மருந்து மாத்திரை மற்றும் மருத்துவச் சிகிச்சைக்கான செலவை பூர்த்தி செய்கின்றனர். மேலும் சிலர் கடந்த ஒரு வருட காலமாக கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் பெறப்பட்ட தொகையை செலவு செய்யாமல் சேர்த்து வைத்து தற்போது தீபாவளி பண்டிகையை முன்னிட்டு புத்தாடை முதல் பலவகையான பண்டிகை கால தேவையை பூர்த்தி செய்து மகிழ்கின்றனர்.

**இதுகுறித்து இந்த திட்டத்தில் பயனடைந்து வரும் திருப்பூர், முத்தனம்பாளை யத்தை சேர்ந்த சரஸ்வதி கூறியதாவது:**

என் பெயர் சரஸ்வதி, நான் காங்கேயம் சாலையில் சாலையோரம் பூக்கடை வைத்துள்ளேன். எனது கணவர் பெயர் பகலவன். அவர் திருப்பூரில் பெயிண்டராக வேலை செய்து வருகிறார். எங்களுக்கு 2 ஆண் குழந்தைகள் இருக்கிறார்கள். குழந்தைகளுக்கான செலவுகளையும், குடும்ப செலவுகளை சமாளிப்பது எங்களுக்கு மிகவும் சிரமமாக இருந்தது. இந்நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை எனும் மகத்தான திட்டத்தினை அறிவித்தார். அத்திட்டத்தில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நடத்தப்பட்ட முகாமில் நான் கலந்து கொண்டு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து அளித்தேன். தற்போது இத்திட்டத்தின் கீழ் பயனாளியாக 1,000 ரூபாய் என்னுடைய வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

இந்த தொகை எங்கள் குடும்பத்திற்கு மிகவும் உதவியாக இருக்கிறது. அவசிய தேவைக்கு யாரிடமும் எதிர் பார்க்காமல் எங்கள் குழந்தைகளின் படிப்பு செலவிற்கு தேவையான ஒரு தொகையை சேமிக்க மிகவும் உதவியாக இருக்கிறது. நான் கடந்த ஒரு வருட காலமாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் பெறப்பட்ட தொகையை செலவு செய்யாமல் சேர்த்து வைத்து தற்போது தீபாவளி பண்டிகையை முன்னிட்டு புத்தாடை முதல் பலவகையான பண்டிகை கால தேவையை பூர்த்தி செய்து கொள்ள முடிகிறது. இத்திட்டத்தின் மூலம் எங்கள் வாழ்க்கை தரம் உயர காரணமான தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என்று கூறினார்.

**இது குறித்து இந்த திட்டத்தில் பயனடைந்து வரும் பல்லடம், அருள்புரத்தை சேர்ந்த பூங்கொடி கூறியதாவது :**

என் பெயர் பூங்கொடி நான் பல்லடம், அருள்புரம் பகுதியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். என்னுடைய கணவர் கூலி வேலை செய்து வருகிறார். என்னுடைய மகன் கல்லூரியில் படித்து வருகிறான். நான் தனியார் கல்லூரியின் விடுதியில் வேலை செய்து வருகிறேன். என்னுடைய மாத வருமானத்தின் மூலம் என் மகனின் படிப்பு செலவையும், குடும்ப செலவுகளையும் சமாளிப்பது மிகவும் சிரமமாக இருந்தது. இந்நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை அறிவித்தார்கள். மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நடத்தப்பட்ட முகாமில் நான் கலந்து கொண்டு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து அளித்தேன். தற்போது இத்திட்டத்தின் கீழ் பயனாளியாக ரூ.1,000 என்னுடைய வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இந்த தொகையை கடந்த ஒரு ஆண்டு காலமாக நான் சேமித்து வைத்தால் நாங்கள் யாரையும் எதிர்பார்க்காமல் எங்கள் குழந்தைகளுக்கு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு புத்தாடை முதல் பலவகையான பண்டிகை கால தேவையை பூர்த்தி செய்து கொள்ள முடிகிறது. மேலும் எனது மகன் அரசு பள்ளியில் படித்த காரணத்தினால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் மூலம் எனது மகனின் வங்கி கணக்கில் மாதம் 1,000 ரூபாய் வரவு வைக்கப்படுகிறது

இந்த தொகை என்னுடைய மகனின் கல்லூரி செலவிற்கு மிக உதவியாக இருக்கிறது. இதன் மூலம் அவன் விரைவில் உயர் கல்வியை முடித்து வேலைக்கு செல்லும் வாய்ப்பு ஏற்படும். இதனால் எங்கள் குடும்பம் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்துள்ளது இத்திட்டங்கள் மூலம் எங்கள் வாழ்வில் ஒளியேற்றிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் குடும்பத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என்று கூறினார்.

**இதுகுறித்து தென்னம்பாளையத்தை சேர்ந்த கவிதா கூறியதாவது :**

என் பெயர் கவிதா, நான் திருப்பூர் எல்ஆர்ஜி மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் இளங்கலைத் தமிழ் இலக்கியம் இரண்டாம் ஆண்டு படித்து வருகிறேன். எனது பெற்றோர் திருப்பூரில் உள்ள தனியார் பனியன் நிறுவனத்தில் வேலை செய்து வருகின்றனர். நான் தற்போது என் உயர்கல்வியை அரசு கல்லூரியில் தான் படிக்கிறேன். மிக குறைவான வருமானத்தில் தான் எங்களுடைய குடும்ப செலவுகளுடன் என்னுடைய கல்லூரி படிப்பிற்கான செலவுகளையும் மிக சிரமப்பட்டு சமாளித்து வந்தோம். தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் மூவலூர் இராமமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதி திட்டத்தின் கீழ் புதுமைப் பெண் என்கிற திட்டத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, அன்றே என்னுடைய வங்கி கணக்கில் ரூ.1,000 வரவு வைக்கப்பட்டது. தற்போது இத்திட்டத்தின் கீழ் எனக்கு ஒவ்வொரு மாதமும் ரூ.1,000 உதவித்தொகை வருகிறது. எனது கல்லூரி படிப்பு செலவிற்கு இத்தொகை எனக்கு பேருதவியாக இருக்கிறது. மேலும் எனது தாய்

மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நடத்தப்பட்ட முகாமில் எனது தாய் கலந்து கொண்டு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து அளித்தார். தற்போது இத்திட்டத்தின் கீழ் பயனாளியாக ரூ.1,000 அவருடைய வங்கி கணக்கில் வரவு வைக்கப் படுகிறது. இந்த தொகையை கடந்த ஒரு ஆண்டு காலமாக எனது தாய் சேமித்து வைத்தால் நாங்கள் யாரையும் எதிர்பார்க்காமல் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு எங்கள் குடும்பத்தில் புத்தாடை முதல் பலவகையான பண்டிகை கால தேவையை பூர்த்தி செய்து கொள்ள முடிகிறது. எங்களை போன்ற எழை, எளிய குடும்பத்தை சார்ந்தவர்களுக்கு இத்திட்டங்கள் மூலம் எங்களது கல்வியை மென்மேலும், படிப்பதற்கு வழி வகை செய்து, எங்கள் குடும்பத்தில் மட்டற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்திய தமிழ்நாடு முதலமைச்ச ருக்கு அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினார்.

**அவிநாசிபாளையத்தை சேர்ந்த வித்யா கூறியதாவது:**

என் பெயர் வித்யா, நான் ஏஜி அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் இளங்கலைத் தமிழ் இலக்கியம், மூன்றாம் ஆண்டு பயின்று வருகிறேன். எனது பெற்றோர்கள் கூலி வேலை செய்து வருகிறார்கள். நான் உயர்கல்வி படிக்க வேண்டும். என்பதற்காக என்னுடைய பெற்றோர் மிகவும் கஷ்டப்பட்டு என்னை படிக்க வைக்கிறார்கள். நான் அரசு பள்ளியில் தான் படித்தேன். என்னுடைய படிப்பிற்கான தேர்வுக் கட்டணம், புத்தகம் வாங்கும் செலவு, உள்ளிட்ட செலவுகளை சமாளிக்க முடியாமல் படிப்பை தொடர முடியுமா என்ற நிலையில் மிகவும் சிரமப்பட்டு வந்தோம். ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் மூவலூர் இராமமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதி திட்டத்தின் கீழ் புதுமைப்பெண் திட்டத்தை தொடங்கி வைத்த அன்றே என்னுடைய வங்கி கணக்கில் ரூ.1,000 செலுத்தப்பட்டதற்கான குறுஞ்செய்தி வரப்பெற்றது. இத்திட்டத்தின் கீழ் தற்போது எனக்கு ஒவ்வொரு மாதமும் ரூ.1.000 உதவித்தொகை வருகிறது. இதனால் என்னுடைய உயர் கல்வி படிப்பை தடையின்றி தொடர முடிகிறது. எங்களை போன்ற ஏழை எளிய குடும்பத்தை சார்ந்த பெண்களுக்கு உயர்கல்வி படிப்பை தொடர பேருதவியாக இருக்கும். மேலும் எனது தாய் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நடத்தப்பட்ட முகாமில் கலந்து கொண்டு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து அளித்தார். தற்போது இத்திட்டத்தின் கீழ் பயனாளியாக ரூ.1,000 அவருடைய வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

என்னுடைய தாய் அந்த பணத்தை எடுக்காமலேயே வங்கிக் கணக்கில் சேமித்து வைத்தார், இதனால் நாங்கள் இந்த தீபாவளி பண்டிகையை மிகவும் மகிழ்ச்சியுடன் கொண்டாட முடி கிறது. எங்களுக்கு தாய், தந்தையர் ஸ்தானத்திலிருந்து உதவி எங்களை பாதுகாக்கும் தமிழ்நாடு முதலமைச்ச ருக்கு எனது சார்பிலும், என் குடும்பத்தார் சார்பிலும், என்னைப் போன்ற மாணவிகளின் சார்பிலும் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன் என்று கூறினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் மகளிர் உதவித் தொகை மூலம் வீட்டு மகளிரும், புதுமைப்பெண் திட்டம் மூலம் வீட்டில் உள்ள பள்ளி, கல்லூரி செல்லும் மாணவிகளும், தமிழ் புதல்வன் திட்டம் மூலம் பள்ளி செல்லும் மாணவர்களும், முதியவர்க ளுக்கான உதவித்தொகை மூலம் முதியவர்களும் என ஏதோ ஒரு வகையில் தமிழகத்தில் ஒவ்வொரு குடும்பமும் தமிழக அரசின் திட்டத்தால் பொருளாதார ரீதியில் பயன் பெற்று வருகின்றனர்.

**முன்னோடி திட்டம் கலைஞர் மகளிர் உரிமை திட்டம்:**

தமிழகத்தின் இத்திட்டத்தை முன் மாதிரியாக கொண்டு கர்நாடகத்தில் மகளிருக்கு மாதம்தோறும் உதவித்தொகை வழங்கக்கூடிய கிரகலட்சுமி திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு நடைபெற்ற ராஜஸ்தான் சட்டசபை தேர்தலிலும் மகளிருக்கு உரிமை தொகை குறித்து வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன இதுவே இந்தியாவையே திரும்பி பார்க்க வைத்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சிக்கு கிடைத்த நற்சான்று ஆகும்.



தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, காயல்பட்டினம் நகராட்சி அருணாசலபுரம் தேசிய நடுநிலைப் பள்ளியில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூபாய் 34 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடம், திருச்செந்தூர் நகராட்சிக்கு உட்பட்ட, சுப்பிரமணியபுரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூபாய் 15 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடம், வேப்பங்காடு டாக்டர் சிவந்தி ஆதித்தனார் தொடக்கப் பள்ளியில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூபாய் 34 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடம், உடன்குடி பேரூராட்சிக்கு உட்பட்ட கொட்டங்காட்டில் சமூக பொறுப்பு நிதியில் இருந்து ரூபாய் 37 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் ஆகியவற்றை பயன்பாட்டிற்கு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி திறந்து வைத்தார். இதில் மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சரும், தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளருமான அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அ.பிரம்மசக்தி, உடன்குடி ஒன்றியச் செயலாளர்கள் டி.பி.பாலசிங், பரமங்குறிச்சி இளங்கோ, பேரூர்க் கழகச் செயலாளர் மா.மால்ராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் அஜய் சீனிவாசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில்

# நவ.4 இல் ‘கோ ஒர்க்கிங் ஸ்பேஸ்’ மற்றும் ‘முதல்வர் படிப்பகம்!’

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்! – அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

**சென்னை, அக். 30 -**

**முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (28-10- 2024) சென்னை, அகரம், ஜெகந்நாதன் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி பன்னோக்கு மையத்தில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் பகிர்ந்த பணியிடம் (Co Working Space) அமைக்கப்பட்டு, நடைபெற்றுவரும் இறுதிக் கட்டப் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்தார்.**

அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கட்டிலில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களுக்கு தேவையான குறிப்பாக அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதிலும் பொருளாதார நிலையில் சரிவர சூழல் இல்லாத மக்களுக்கு அவர்களுக்கு தேவையான படிக்கின்ற வசதி மற்றும் தொழில் முனைவோர் பயிற்சியை தொடர்ந்து கொளத்தூர் தொகுதியில் தன்னுடைய சொந்த முயற்சியால் செய்து கொண்டிருக்கின்ற தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் என்றால் அதற்கு மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. அந்த வகையில் ஏற்கனவே கணினி பயிற்சி வகுப்பு மறைந்த அனிதாவின் நினைவாக அவர்களின் பெயரிலேயே துவங்கப்பட்டு முதலில் முழுக்க பெண்களுக்கென்று தனியார் ஒரு கணினி மையத்தை கட்டணமில்லா பயிற்சி மையத்தை உருவாக்கினார்.

அதைத் தொடர்ந்து ஆண்களுக்கு என்று கட்டணம் இல்லாமல் கணினி பயிற்சி மையத்தை உருவாக்கினார், அதைத் தொடர்ந்து தையல் பயிற்சி கூடத்தை கட்டணம் இல்லாமல் உருவாக்கினார். இந்த மூன்று பயிற்சி கூட்டத்தில் பயலுகின்ற மாணவர் செல்வங்களுக்கு எந்தவித கட்டணமும் இல்லாமல் அவர்கள் பயிற்சி முடித்த பிறகு கணிணி பயிற்சி முடித்தவர்களுக்கு இலவசமாக மடிக்கணினியும், Tally தேர்வுக்குண்டான கட்டணத்தையும் தானே தன் சொந்த பொறுப்பில் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு கணினி முடிப்பதற்கு உண்டான tally தேர்வு முடித்ததற்கான சான்றிதழ்களும், மடிக்கணினியும் இலவசமாக கட்டணம் இல்லாமல் வழங்கி கொண்டு வருகின்றார்.

**2000 பெண்கள் பயனடைந்திருக்கிறார்கள்!**

அதேபோல் தையல் பயிற்சி முடித்தவர்களுக்கும் தையல் பயிற்சி முடிவுற்ற பிறகு அவர்களுக்கு பல்வேறு பரீட்சைகள் வைக்கப்பட்டு அதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு சான்றிதழும், அதேபோல் இலவசமாக மோட்டார் பொருத்திய தையல் இயந்திரமும் வழங்கப்படுகின்றது. இதில் குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் பெண்களின் முன்னேற்றத்திற்கு பாடுபடுபவர் நம்முடைய முதலமைச்சர் என்பது ஆட்சியில் இருக்கும்போது மட்டும் இல்லாமல் ஆட்சியில் இல்லாத போதும், இது முழுவதுமாக பெண்கள் கணினி கற்பதற்காக ஏற்படுத்தப்பட்ட இந்த மையம் அனிதா பேரிலே, தொடர்ந்து அந்த மையத்திலே இதுவரையில் 2000க்கும் மேற்பட்ட பெண்கள் பலனடைந்திருக்கின்றார்கள். 13வது நிகழ்வாக அதாவது 13வது பேட்ச்சாக வருகின்ற நான்காம் தேதி அதில் பயிற்சி முடித்தவர்களுக்கு கணினி வழங்க இருக்கின்றார். 105 பிள்ளைகளுக்கு கணினியும், 360 பிள்ளைகளுக்கு தையல் இயந்திரமும் வருகின்ற நான்காம் தேதி வழங்க இருக்கின்றார்.

அதோடு இலவசமாக கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு இலவச கண் சிகிச்சை மையத்தை தொடங்கினார். அந்த இலவச கண் சிகிச்சை மையத்தில் சிகிச்சை பெறுபவர்களுக்கு கண் குறைபாடு உள்ளவர்களுக்கு எந்த விதமான கட்டணமும் இல்லாமல் மூக்கு கண்ணாடி மற்றும் புத்தாடைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. அதேபோல் புறை அறுவை சிகிச்சை என்பது கட்டணம் இல்லாமல் சொந்த ஏற்பாட்டில் அகர்வால், சங்கர் நேத்ராலயா போன்ற உயர்தர மருத்துவமனைகள் மூலமாக அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றன.

அதன் ஒரு நிகழ்வாக இன்றைக்கு முதல்வர் படைப்பகம் என்ற பெயரில் சென்னை பெருநகர மாநகராட்சியும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமமும் இணைந்து சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் தமிழக முதல்வர் அவர்களுடைய சட்டமன்ற உறுப்பி னர் மேம்பாட்டு நிதியை கொண்டு புதிதாக “முதல்வர் படைப்பகம்” என்பதை வருகின்ற நவம்பர் 4 ஆம் தேதி துவக்கி வைக்க உள்ளார்கள். இந்த படைப்பகத்தில் வருகின்றவர்களுக்கு படிப்பதற்கென்று ஒரு தளமும், அதை போல் பணியாற்றுவதற்கு என்று ஒரு தளமும், உணவு அருந்துவதற்கு உணவு கூடம் என்ற ஒரு தளமும் மூன்று தளங்களைக் கொண்ட இந்த கட்டடம் மாணவனுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வருகின்ற நவம்பர் மாதம் 4ம் தேதி துவக்கப்பட இருக்கின்றது. ஒரே முறை 51 நபர்கள் படிக்கின்ற அளவிற்கு படிக்கின்ற வசதி ஏற்பாடு செய்யப்படுகின்றது. அந்த படிப்பிற்கு தேவையான புத்தகங்களை கொண்ட ஒரு நூலகமும் அமைக்கப்பட இருக்கின்றது.

அதேபோல் கோவர்கிங் ஸ்டேஷன் எனப்படுகின்ற, அவர்கள் பணி செய்வதற்குண்டான ஒரு தளத்தை உருவாக்கியிருக்கின்றோம். அதில் 38 நபர்கள் ஒரே முறையாக படிப்பதற்குண்டான நல்ல சூழ்நிலையை உருவாக்கி தந்திருக்கின்றோம். அதில் 3 கலந்தாய்வு கூடம் (Conference Hall) உருவாக்கின்றோம். ஒவ்வொரு கலந்தாய்வு கூடத்தில் இரண்டில் 4 4 நபர்களும், ஒன்றில் 6 நபர்களுக்கும் இதில் உட்கார்ந்து பணிகளை மேற்கொள்வதற்கான கட்டமைப்பை உருவாக்கியிருக்கிறோம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகின்ற நவம்பர் மாதம் 4ம் தேதி கொளத்தூரில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் சென்னையிலே ஏற்படுத்தப்படுகின்ற முதல் கோ ஒர்க்கிங் ஸ்பேஸ் (1st CoWorking Space) எனப்படும் “முதல்வர் படைப்பகம்” கட்டடத்தை திறந்து வைக்கிறார்.

குறைந்த கட்டணத்தில் அதாவது முழுவது மாக இலவசம் என்றால் அதை வந்து பயன்படுத்துபவர்கள் நேர்த்தியானவர்கள் கிடைக்க மாட்டார்கள், பொழுதுபோக்கு கூடமாக மாறிவிடக்கூடாது என்பதற்காக ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என்ற கட்டணத்தை தான் நிர்ணயித்துள்ளோம். அதேபோல் பணி செய்பவர்கள் கூட கோ ஒர்கிங் ஸ்பேஸ்ல் கூட பெரிய பெரிய மிட்டா மிராசு கம்பெனிகளுக்கு வழங்கப்போவதில்லை. பொருளாதாரத்தில் சாதாரண நிலையில் இருக்கின்ற அந்த நிறுவனங்களுக்கு இந்த பணியிடத்தினை பகிர உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கும் எவ்ளோ குறைந்த அளவு கட்டணத்தை நிர்ணயிக்க முடியுமோ அந்த அளவு குறைத்து கட்டணத்தை நிர்ணயிக்க உள்ளோம். இது ஓர் புது மாதிரியான முயற்சி இந்த முயற்சி அணைத்து பகுதிகளிலும் தொடர வேண்டும் என்று தமிழ்நாடு முதல்வர் விருப்பம் தெரிவித்து இருக்கின்றார். இது கொளத்தூரை முன் மாதிரியாக ஆக்குகின்ற முயற்சி.

முழு முயற்சியில் இந்த அமைப்பு உருவாவதற்கு நம்முடைய துறையினுடைய செயலாளர் அன்பிற்கினிய திருமதி. காகர்லா உஷா, இந்த சென்னை பெருநகர மாநகராட்சிகளுடைய ஆணையாளர் திரு.குமரகுருபரன், சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமத்தின் உறுப்பினர் செயலாளர் அன்பிற்கினிய அன்சுல் மிஸ்ரா, ஆர்.பி.சி. பிரவீன் ஒருங்கிணைந்து இந்த பணிகளை சிறப்போடு மேற்கொண்டு வருகிறார்கள். மாணவ செல்வங்களுக்கு இந்த முதல்வர் படைப்பகம் அர்ப்பணிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் கூறினார்.

இந்த ஆய்வின்போது மேயர் திருமதி. ஆர்.பிரியா ராஜன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமர குருபரன், மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவின் குமார், மண்டலக் குழுத் தலைவர் திருமதி. சரிதா மகேஷ்குமார், மாநகராட்சி மண்டல அலுவலர் ஏ.எஸ். முருகன், சி.எம்.டி.ஏ. கண்காணிப்புப் பொறியாளர் திரு.பாலமுருகன், செயற்பொறியாளர்கள் ராஜன் பாபு, சரவணன், பகுதிச் செயலாளர் ஐ.சி.எப்.வ. முரளிதரன், சந்துரு, மாமன்ற உறுப்பினர்கள் நாகராஜன், திருமதி. தாவுத்பீ மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



புதுக்கோட்டை மாநகராட்சியில் பண்டிகையை முன்னிட்டு,மேயர் திலகவதி செந்தில் ஏற்பாட்டில் 100க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு புத்தாடைகள், இனிப்பு, மற்றும் ரூ.500/ ரொக்கம் ஆகியவற்றை வழங்கினார். உடன் மிசா ஆறுமுகம் செந்தில்,க.மதியழகன், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க நிர்வாகிகள் ஆசிரியர் ஆர்.நெடுஞ்செழியன், ஆசிரியர் க.காந்தி, தனலட்சுமி லைட் ஹவுஸ் அ.சிவகுமார், கரம்பக்குடி கலிபுலா சுல்தான், வி.மலர்விழி மற்றும் கழக நிர்வாகிகளும் சங்க நிர்வாகிகளும் பங்கேற்றனர்.